R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
April 2021






## வேலூர் கிறிஸ்துவின் சபை

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**

Every Tuesday 6.00 P.M on Tamilan TV
Every Thursday 6.00 P.M on Tamilan TV
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

love God
love people
be a servant





THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 21 ஏப்ரல் 2021 கனி 5

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

MONTHLY THE WORD OF CHRIST

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39





பாடம் : 17
தலைப்பு : அஞ்ஞானபலி – Idolatrous Sacrifice
வேத வாசிப்பு : 2நாளாகமம் 28:22-25

1. தங்கள் தேவர்களைச் சோரமார்க்க - யாத்.34:15
2. ஆகாஸ் ராஜாவின் துரோகம் - 2நாளா.28:22-25
3. அஞ்ஞானிகளின் பலி - 1கொரி.10:20-23



தேவன் என் இரட்சிப்பு
தேவன் என் இரட்சகர்
தேவன் ஆவியாயிருக்கிறார்
தேவன் உண்மையுள்ளவர்
தேவன் அன்பாகயிருக்கிறார்

God is my salvation
God is my savior
God is spirit
God is faithful
God is love



**the word of christ** இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் **YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509








**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


திி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 248

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. முகாந்தரம் இல்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என்னை ஒரு பட்சியைப்போல வேட்டையாடினார்கள் என எழுதும் தீர்க்கன் யார்?
2. தீத்து உங்களிடத்தில் ஏதாவது பொழிவைத்தேடினானா? என்று எந்த சபைக்கு பவுல் எழுதினார்?
3. எகிப்தியரின் ஜநநதேசம் எது?
4. புறஜாதியாரை யூதர் முறையாக நடக்கும்படி கட்டாயம்பண்ணினதாக பவுல் யாரைக் குறிப்பிடுகிறார்?
5. எந்த ராஜா தான் கண்ட சொப்பனம் எனக்குத் திகிலை உண்டாக்கிற்று என்றான்?
6. பாவமன்னிப்பாகிய மீட்பு எவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது?
7. எவனைப்போல உடன்படிக்கையை மீறி, அங்கே எனக்கு விரோதமாக துரோகம்பண்ணினார்கள் என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டுபேசினார்?
8. எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன் என்ற அப்போஸ்தலன் யார்?
9. அக்கினி வனாந்திரத்தின் மேய்ச்சல்களைப் பட்சித்துப்போட்டது என கர்த்தரை நோக்கி கூப்பிட்ட தீர்க்கன் யார்?
10. ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?

## வேதாகம ஆய்வு... 31 — எசேக்கியேல் - Ezekiel




1. தேவனுடைய பலம்
2. பூசியென்னும் ஆசாரியனின் மகன்
3. நான்கு பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவன்
4. யோயாக்கீன் சிறைபட்டுப்போனபோது இவனும் பாபிலோனுக்கு கொண்டுபோகப்பட்டான்
5. கேபார் நதியண்டையிலே சிறைப்பட்டவர்கள் நடுவிலிருக்கும்போது தேவதரிசனங்கண்டான் – எசே.1:1
6. கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசியை அடையாளமாகவைத்தார் – எசே.24:24

சிறுவர் பகுதி

## பூமியிலிருந்து அகற்றவேண்டும்

வேத பகுதி: அப்போஸ்தலர்22:17-22




**அ**ப்போஸ்தலனாகிய பவுலை அறியாதவர்களே இருக்க முடியாது ஏனென்றால் பரிசுத்தவேதாகமத்திலே அவர்தான் அதிகமான புத்தகங்களை எழுதியிருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு பரிசுத்தவானை முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஜனங்கள் அவனை பூமியிலிருந்து அகற்றவேண்டும் என்று சொன்னார்கள். சொன்னவர்கள் வேறுயாரும் அல்ல அவனுடைய சுய ஜனத்தார்களே! அவனுக்கு விரோதமாக மிகுந்த சத்தமிட்டனர். இன்றைக்கும் அப்படித்தான் சுய ஜனங்கள் நம்மை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதைப்போல பவுலை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் ஞானஸ்நானம் பெற்று பின்பு எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்திலே ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டியடைந்து அவரைக் (கர்த்தரைத்) தரிசித்தான். அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ என்றார்.

அதற்கு பவுல்: ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெபஆலயங்களில் அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது நானும் அருகே நின்று அவனைக் கொலைசெய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்ததையும். இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றான். அதற்கு அவர்: நீ போ, நான் உன்னைத் துரமாய் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்றார்.

அந்தப்படியாக அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் எடுத்துபயன்படுத்தினார். அவன் மூன்று சுவிசேஷப்பயணத்தினால் அநேக சபைகளை ஏற்படுத்தினான். மேலும் 14 நிருபங்களையும் எழுதினான். பவுல் சொல்லும்போது எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம்வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன் என்கிறார். அவர் காலதாமதம் செய்யாமல், தேவனுடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, தாமதமில்லாமல் ஊழியம் செய்யும்படியாக கடந்து சென்றார். இந்தப்பவுலைப்போல கர்த்தருக்கு நீங்களும் எதிர்காலத்தில் ஊழியம் செய்வீர்களா?

**மனப்பாட வசனம்**

**“தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்படமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” (லூக்கா4:24)**

‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ மாத இதழை ஒவ்வொரு மாதமும்
10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509
என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 21 ஏப்ரல் -2021 கனி - 5

ஆசிரியருரை

## உலகமோ அவரை அறியவில்லை
### The World Did Not Know Him



எவரை என்று கேட்கிறீர்களா? **உலகத்தில் பாவிகளை இரட்சிக்கவந்த ஆண்டவர் இயேசுவை உலகம் அறியவில்லை.** "அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை" (யோவா.1:10). நாம் வாழ்ந்துகொண்டிருக்கிற உலகத்தில் அவர் இருந்தார். He was in the world. ஆனால் அப்பொழுது இருந்த உலக மக்கள் அவரை அறியவில்லை. இயேசுவுக்கு முன்னோடியாக அனுப்பப்பட்ட யோவான் அவரைக்குறித்து; "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்றான் (யோவா.1:29). அவனுடைய சீஷர்கள் அதைக்கேட்டு அவருக்குப்பின் சென்றனர். ஆனால், உலகமக்கள் உலகத்தின் பாவத்தை போக்கும்படியாக அனுப்பப்பட்ட இயேசுவை அறியாதுபோனார்கள். மனிதனுடைய பாவத்தைபோக்க ஆடு பலியிடப்பட்டு வந்தது. நிரந்தரமாக மனிதனுடைய பாவத்தைபோக்க தம்முடைய குமாரனையே தேவன் பலியாக ஒப்புக்கொடுத்தார். ஆகையால் யோவான் அவரைக்குறித்து சொல்லும்போது; இதோ, உலகத்தின் பாவத்தைபோக்கும் தேவ ஆட்டுக்குட்டி என்றான். "பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு; நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்; அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்" (யோவா.1:45). இவர் தீர்க்கதரிசனத்தில் பேசப்பட்டுள்ளார். நியாயப்பிரமாணத்திலே மோசே போன்றோர் இவரைக்குறித்து பேசியுள்ளனர். இவைகளை வாசித்து அறிந்த பிலிப்பு நாத்தான்வேலிடத்தில் அந்த இயேசுவை நாங்கள் கண்டோம் என்றான். அநேகர் அவரை கண்களிலிருந்தும் காணாதுபோய் விட்டார்கள். இச்செய்தியை வானொலிமூலம் கேட்டுக்கொண்டிருக்கும் அன்பு நேயரே, அவரைக்குறித்து நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா.1:14). எத்தனையோ தீர்க்கதரிசிகளை பார்த்திருக்கிறார்கள். ஆனால் பிதாவுக்கு ஏற்றவராகிய அவருடைய மகிமையை அவர்களுக்குள்ளே அவர் வாசம்பண்ணும்போது யோவானைப்போன்றவர்கள் கண்டார்கள். சத்தியம் சத்தியம் என்று கேள்விப்படுகிறோம் அல்லவா? அந்த சத்தியம் எப்படியிருக்கும் என்று யாராவது பார்த்ததுண்டா? அந்த சத்தியம் அதாவது

வார்த்தை மாம்சமாகி இந்த உலகத்திற்கு கடந்துவந்தார். அவர் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் இருந்தார். உலக மக்கள் சில கஷ்டங்கள் வந்தவுடன் அந்த கடவுளுக்கும் இந்தவிதமான பாடுகள் கஷ்டங்கள் வந்தால்தானே தெரியும் என்பார்கள். மனிதனுக்கு வரக்கூடிய அத்தனை பாடுகளையும் ஆண்டவர் இயேசு மாம்சத்தில் வந்து சிலுவை வரை அவைகளை அனுபவித்தார். இது உலகமறிந்த உண்மையாக இருக்கிறது. வேதாகமும் அதற்கு சாட்சியிடுகிறது. "காணதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார்" (யோவா.9:39). ஆம் பரிசேயர், வேதபாரகர், போன்றோர் அவருடைய உபதேசத்தில் குற்றம்கண்டுபிடிக்கும்படியாக வகைதேடினார்கள். ஆனால் நியாயப்பிரமாணத்தில் மோசேயும் தீர்க்கதரிசிகளும் சொன்னவரை குறித்து சிந்திக்காமல் அவர்களுடைய கண்கள் குருடாக்கப்பட்டவர்களைப்போல அவரை காணாது போனார்கள். ஆகையால் ஆண்டவர் சொல்லும்போது காண்கிறவர்கள் குருடரானார்கள், காணாத குருடரைப்போலஉள்ளவர்கள் கண்டுகொண்டார்கள் என்றார். நீங்கள் ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் பார்த்தால் நீங்களும் அவரைக் கண்டுகொள்ளலாம்.

**உலகம் அவர்மூலமாய் உண்டாயிற்று என்று வாசித்தோம்.** The world was made through Him. ஆம், நாம் காண்கிற யாவும் அவர் மூலமாகவே உண்டாயின. இதை நீங்கள் நம்புகின்றீர்களா? உலகம் பலவகையில் உண்டானதாக அறிவியல் சொல்லுகிறது. ஆனால் வேதாகமம் இயேசுவினால் உண்டாயின என போதிக்கிறது. மேலும் "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவா.1:13). அவர் மூலமாகவே உண்டானதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்பது இன்றைய மானிடர்களின் கேள்வி. அவரால் உண்டாக்கப்பட்ட நாமும் அவரால் உண்டாக்கப்பட்ட இயற்கைகளும் அவருடைய வார்த்தைக்குக் கட்டுப்படும்போது அது அவரால் உண்டாக்கப்பட்டதற்கான ஆதாரமாக இருக்கிறது. இதைக்காட்டிலும் வேறு என்னவேண்டும்? "பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே. அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்று பார்வையடைந்த குருடன் அவரை அறியாத மக்களைப் பார்த்து சொன்னான் (யோவா.9:32,33). ஆண்டவர் இயேசு தான் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதை ஜனங்கள் அறியவேண்டுமென்று சொல்லி ஒரு சில அற்புதங்களை செய்தார். அப்படிப்பட்ட அற்புதங்களைப் பார்த்த ஜனங்களில் சிலர் அவரை விசுவாசிக்காமல் பொறாமையினாலும் தங்களுடைய பாரம்பரிய கட்டுகளினாலும் அவரை ஏற்றுக்கொள்ளாதிருந்தனர்.

அநேகர் பார்த்துக்கொண்டிருந்தவேளையில்; மரித்து நான்கு நாட்களான லாசரு கல்லறையைவிட்டு வெளியே வந்தான். எப்படி? "லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க்கூப்பிட்டார்" (யோவா.11;43). மரித்தோர் ஆண்டவருடைய சத்தம் கேட்டு உயிரோடு எழுப்பப்பட்டிருக்கும்போது; அவரால் மனிதன் உண்டாக்கப்பட்டான் என்பதற்கு இதற்கு மேல் என்ன சான்று வேண்டும். உலகத்திலே எத்தனையோ அற்புதங்களை செய்கிறோம், மாயவித்தைகளை செய்கிறோம் என்கிறவர்கள் இதை செய்திருக்கிறார்களா? மரித்த ஒரு மனிதனை உயிரோடு எழுப்பியிருக்கிறார்களா? நாம் எந்த ஒரு செய்தி தாளிலும் வாசித்தது



"ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நாம் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்" (2கொரி.12:9) என்று பவுல் கூறுவது போல நாமும் கூறுவோம். நம்முடைய பலவீனங்கள், வேதனைகள், தொடர்ச்சியான துக்கங்களாகிய முள் நம்மை குட்டும் சாத்தானுடைய தூதர்கள் என நினைத்து, கிறிஸ்துவின் வல்லமை நம்மேல் தங்கும்படி ஜெபிப்போம். நம்முடைய மேன்மையைக் குறித்து நம்மை உயர்த்தாதபடிக்கு நம் பலவீனங்களைக் குறித்தே மேன்மைபாராட்டுவோம். "அவரோடேகூட (இயேசுவோடுகூட) பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்;...." (2தீமோ.2:12). இயேசுவையும் வேதாகமத்தில் குறிப்பிட்டப்பட்டுள்ள அவருடைய சீஷர்களையும் நமக்கு மாதிரிகளாகக் கொள்ளுவோம். "ஆதலால் இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்" (ரோம.8:18). தேவன் தாமே நம்மை பலப்படுத்துவாராக! ஆமென்!

## கிறிஸ்துவின் சபை

Church of Christ

**I இதன் தொடக்கம்**

1. இயேசுவினால் கட்டப்பட்டது - மத்.16:15
2. எருசலேமில் துவங்கப்பட்டது - லூக்.24:47
3. இதன் ஒரே தலைவர் கிறிஸ்து - எபே.5:23

**II இதன் நாமம்**

1. கிறிஸ்துவின் சபை - ரோம.16:16
2. அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை - அப்.4:12

**III இதன் ஆராதனை**

1. பாடல் (வாத்திய கருவியோ அல்லது கைதட்டலோ இல்லாமல்) - எபே.5:19
2. ஜெபம் - 1தீமோ.2:8
3. பிரசங்கம் - அப்.20:7
4. கொடுத்தல் - (மனவிருப்பத்தின்படி) - 1கொரி.16:1-3
5. கர்த்தருடைய பந்தி - அப்.20:7

**IV எப்படி அங்கத்தினராக மாறுவது? [ஒரு கிறிஸ்தவன் மாத்திரமே] – அப்.11:25**




1. சுவிசேஷத்தைக் கேள்விப்படுதல் - அப்.15:7
2. விசுவாசித்தல் - எபி.11:6
3. மனந்திரும்புதல் - லூக்.13:3
4. கிறிஸ்துவை அறிக்கையிடுதல் - மத்.10:13
5. ஞானஸ்நானம் பெறுதல் - மாற்.16:16

**V** இது வேதாகமம் எங்கு பேசுகிறதோ அங்கு பேசுகிறது

**VI** வேதாகமத்தில் உள்ள ஒரே சபை இதுவே

சபை உங்கள் ஒவ்வொருவரையும்
அன்புடன் அழைக்கிறது
தயவுசெய்து வாருங்கள்.

# முள் – Thorn

பெண்கள் பகுதி

-Glory Arjunan



**– சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

அடுத்த வசனத்தில் அவன் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டான் என வாசிக்கிறோம். "அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டேன்" (2கொரி.12:8). என எழுதப்பட்டுள்ளது. நமதாண்டவராகிய இயேசுவும் மூன்று முறை ஜெபித்தார் என வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்து தாம் படப்போகிறபாடுகளினிமித்தம் துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார். 'அப்பொழுது, அவர்: என் ஆத்துமாக மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி சற்று அப்புறம்போய், முகங்குப்புறவிழுந்து என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.... அவர் மறுபடியும் **இரண்டாம் தரம் போய்:** என்பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.... அவர் மறுபடியும் அவர்களை விட்டுப்போய் **மூன்றாந்தரமும்** அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெம்பண்ணினார்" (மத்.26:39-44) என வாசிக்கிறோம். இயேசுவைப் போலவே பவுலும் தனக்குக் கொடுக்கப்பட்ட முள் நீங்கும்படி கர்த்தரிடத்தில் மூன்றுதரம் வேண்டிக்கொண்டான். இருவரும் ஜெபித்தபடி அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பாடுகளும் முள்ளும் அவர்களை விட்டு நீங்கினதா? இல்லை!

நமக்கும் நம்முடைய வாழ்வில் பாடுகளும் முள்ளும் கொடுக்கப்பட்டிருக்கலாம் நாமும் பலமுறை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் முள் நீங்கும்படி ஜெபித்திருப்போம். எத்தனை வருடங்கள் ஜெபித்தாலும் தொடர்ச்சியாக நம்மை குட்டிக்கொண்டேயிருக்கும் சாத்தானுடைய தூதனாகிய அந்த முள் நம்மைவிட்டு நீங்குவதில்லை. ஆனாலும் "...நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே (எபி.13:5). நாம் தைரியம் கொண்டு திடமனதாயிருப்போம்.

பவுலுக்குக் கர்த்தர் கொடுத்த பதில், "அதற்கு என் அவர் என்கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே பலம் பூரணமாய் விளங்கும் என்றார்" (2கொரி.12:9). ஆம், நமக்கும் இதுவே பதில். கர்த்தருடைய கிருபை நமக்குப் போதும்; பலவீனத்திலே அவருடைய பலம் பூரணமாய் விளங்கும். இயேசு கிறிஸ்துவை நினைத்துக்கொள்வோம். அவரும் பிதாவை நோக்கி, தமக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரம் நீங்கும்படி ஜெபித்தபோது தேவதூதன் தோன்றி அவரை பலப்படுத்தினான் "அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்" (லூக்.22:43) என வசிக்கிறோம். பாருங்கள், இந்த வசனங்களும், நிகழ்வுகளும் நம்மை எவ்வளவாய் ஆறுதல்படுத்துகிறது!



இல்லை. பரிசுத்த வேதாகமம் லாசருவை இயேசு உயிரோடு எழுப்பினார் என்று எழுதியிருக்கிறது. அப்பொழுது இருந்த உலகம் அதை கண்கூடாக பார்த்தது அவர்களும் அவைகளுக்கு சாட்சிகளாயிருக்கிறார்கள். மேலும், ஆண்டவர் ஒருமுறை; சீஷர்களை அனுப்பும்போது, "அவர்கள் ஏறக்குறைய மூன்று நாலுமைல்தூாரம் தண்டுவலித்துப் போனபொழுது, இயேசு கடலின்மேல் நடந்து, படவுக்குச் சமீபமாய் வருகிறதைக் கண்டு பயந்தார்கள்" என்று யோவா.6:19-ல் படிக்கிறோம். உலகத்தில் சிகரங்களில் ஏறும் வீரர்களையும், பலவிதமான வித்தைகளை செய்யும் வீரர்களையும், நெருப்பில் நடக்கும் மனிதர்களையும் பார்க்கிறோம் ஆனால் தண்ணீரில் நடக்கும் மனிதர்களை பார்த்திருக்கிறீர்களா? அது ஒருவராலும் கூடாது ஏனெனில் எல்லாவற்றிலும் மனிதர்களை ஏமாற்றி வித்தைகளை செய்து நெருப்பில் நடந்துவிடலாம் ஆனால் தண்ணீரில் நடக்கமுடியாது. இயேசுவானவர் கடலில் நடந்து தம்முடைய சீஷர்களிடம் சென்றார் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டனர். அவர்களுடைய விசுவாசம் இன்னும் அதிகரிப்பதற்கு அச்சம்பவம் உதவியாயிருந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். அவருக்கு வானத்திலும் பூமியிலும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரால் நாம் காண்கிற அனைத்தும் உண்டாக்கப்பட்டது. இதை நீங்கள் விசுவாசிக்கும்போது இயேசுவினால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

இயேசுவை அப்பொழுது இருந்த உலகம் அறியவில்லை என வாசித்தோம். இன்றும் கூட அநேகர் இயேசுவை அறியாதவர்களாகவே இருக்கின்றனர். ஏன் இயேசுவுக்கு முன்னோடியாக அனுப்பப்பட்ட யோவான் ஸ்நானகனும் இப்படியே சொல்லுகிறான்; "நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்; ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன்"என்று சொன்னான் (யோவா.1:33,34). யோவான்ஸ்நானகனுடைய சாட்சியை பார்த்தீர்களா? இவ்வளவு பெரிய சாட்சி இருக்கும்போது நீங்கள் அவரை ஏற்றுக்கொள்வதற்கு என்ன தயக்கம். உலகத்தைப் பார்க்கிறீர்களா? உலகம் உலகத்தை சிநேகிக்கும். உலகம் உங்களை பாவத்திலிருந்து விடுவிக்காது. உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையாக இருக்கிறது. உலகத்தை வெறுத்து ஜீவனைப் பற்றிக்கொள்ளுங்கள்.

நாத்தான்வேல் என்ற மனுஷன் பிலிப்புவைப்பார்த்து; "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா என்றான். அதற்கு பிலிப்பு வந்துபார் என்றான்" (யோவா1:46). நாசரேத்திலே இயேசுவானர் வளர்க்கப்பட்டார். இன்றைக்கும் சிலர் கடவுள் என்றால் அவர் சந்திரனில் பிறந்திருக்கவேண்டும். சற்று வித்தியாசமான தோற்றத்தை உடையவராக இருக்கவேண்டும் என்று விரும்புகின்றனர். ஆகையினாலே காணாதவைகளில் துணிவாய் நுழைந்து மோசம்போகின்றனர். அன்பானவர்களே, இதே கண்ணோட்டத்தோடேதான் நாத்தான்வேல் பிலிப்புவைப்பார்த்து கேட்டான். யூதேயாவிலே ஆயிரங்களுக்குள்ளே சிறிதான பெத்லகேமிலே இயேசு பிறந்தார் என திருமறை போதிக்கிறது. மனிதனை மண்ணினாலே உண்டாக்கியவருக்கு இடம் ஒரு பெரிய காரியமல்ல. உலகத்திலே அடிமட்டத்தில் இருக்கிறவர்களையும் கர்த்தர் நேசிக்கிறார் என்பதற்கு அடையாளமாக சிறிதான ஒரு இடத்தை கர்த்தர்

தேர்ந்தெடுத்தார். கல்விமான்களையும் ஞானிகளையும் வெட்கப்படுத்தும்படியாக படிப்பறிவு இல்லாதவர்களை தெரிந்துகொண்டார் இதை நீங்கள் அறிவீர்களா? ஆண்டவருடைய அற்புதங்களையும், அவருடைய அன்பின் ஆழங்களையும் வேதாகமத்தின் துணைகொண்டு அறிந்துகொள்ளுங்கள். ஆகையாலே பிலிப்பு நாத்தான்வேலை கண்டு வந்து பார் என்றான். நீங்கள் அவரையும் அவருடைய உபதேசங்களையும் அறிந்துகொள்ள சபை கூட்டங்களுக்குச் செல்லுங்கள். வேதாகமத்தை அநுதினமும் வாசியுங்கள். "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன் என்று" யோவான் 17:3-ல் வாசிக்கிறோம். அந்த மெய்த்தேவனை அறிந்துகொள்ளுங்கள்.

நீங்கள் இந்த உலகத்தில் இருந்ததற்கு அடையாளமாக எதை கொண்டுபோகப்போகிறீர்கள். அடையாளமாக எதை விட்டுவிட்டுப்போகப் போகிறீர்கள். நீங்கள் ஒன்றையும் இந்த பூமியிலிருந்து எடுத்துக்கொண்டு போகமுடியாது. ஆனால் உண்மையான மெய்த்தேவனை அறிந்தவர்களாக போகமுடியும். அதை நீங்கள் முதலாவது செய்யுங்கள். மேலும் அவரால் அனுப்பப்பட்ட இயேசுகிறிஸ்துவையும் அறிந்துகொள்ளுங்கள். அப்பொழுது நித்திய ஜீவனாகிய வாழ்வை அவர் மூலமாகப் பெற்றுக்கொள்வீர்கள். இயேசுவானவர் சமாரிய பெண்ணிடம் பேசும்போது; "நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது. தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்" (யோவா.4:22,24). இன்றைக்கு அறியாததை தொழுதுகொண்டு வரும் உலகத்தில் நீங்கள் வாழ்ந்துகொண்டு வருகிறீர்கள். உலகத்திற்கு இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது. அந்த யூதகோத்திரத்தில் இயேசு பிறந்தார். அவர் உலகத்தில் இருந்தார் உலகம் அவர்மூலமாய் உண்டாயிற்று உலகமோ அவரை அறியவில்லை. ஆனால் நீங்கள் இச்செய்தியின்மூலமாக அவரையும் அவர் அனுப்பினவரையும் அறிந்து கொண்டீர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொண்டு இரட்சிக்கப்படுங்கள்.

**உங்களுக்காக இயேசு எப்படி ஜெபித்தார் என்பதை நீங்கள் அறிவீர்களா?**

"நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள். நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்" (யோவா.17:25,26). உலகம் இயேசுவையும், பரலோக பிதாவையும் அறியவில்லை; தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அறிந்துகொண்டார்கள். ஆனால் உலகத்தில் ஒருவனும் கெட்டுப்போவது பிதாவின் சித்தமல்ல. ஆகையால் பிதாவாகிய தேவனையும் அவருடைய அன்பையும் குமாரனாகிய இயேசு இவ்வுலகிற்கு அறிவித்தார். தம்மால் தெரிந்துகொள்ளுப்பட்டவர்களைக் கொண்டு இன்னும் அறிவித்துக்கொண்டே இருக்கிறார், அதை நீங்கள் அறிவீர்களா? நீங்கள் இரட்சிக்கப்படவேண்டும். வீணானவைகளை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பவேண்டும் என்பதையே தேவன் விரும்புகிறார். அவரை அறிந்துகொள்ளுங்கள். உங்களுக்காகஜெபிக்கிறோம்.



# பிரிஸ்கில்லாள் - Priscilla

*-Glory Arjunan*



முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களில் ஒரு சிறந்த ஊழிய தம்பதியராக ஆக்கில்லா- பிரிஸ்கில்லாள் தம்பதியர் கருதப்படுகின்றனர். பிரிஸ்கில்லாள் தன் புருஷன் ஆக்கிலாவுடன் இணைந்து மனரம்மிய முள்ளவளாக கிறிஸ்துவையே முன் வைத்து ஊழியம் செய்துவந்தவளாக அடையாளப்படுத்தப்படுகிறாள். இவளுடைய குடும்பப் பின்னணியும், இவளுடைய பெற்றோர் பற்றியும் வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லையென்ற போதிலும் வேதாகம ஆராய்ச்சியாளர்கள் இவளைக் குறித்து பின்வருமாறு வர்ணிக்கின்றனர்.

- பிரிஸ்கா என்பது இவளது ரோம பெயரென்றும் பிரிஸ்கில்லாள் என்பது ஆங்கில மொழியிலிருந்து வந்தது என்றும் கூறுகின்றனர்.
- பிரிஸ்கில்லாளும் அவளுடைய கணவனும் யூதர்கள் - கொரிந்துவில் கனம்பொருந்தியவர்கள்.
- பவுலினால் அதிகமாக நேசிக்கப்பட்ட உடன் ஊழியர்கள்.
- பிரிஸ்கில்லாள் எப்போதும் தன் கணவனோடு இணைந்தே இருப்பவள் - ஒருபோதும் இவளை இவளுடைய புருஷனிடமிருந்து பிரிப்பது கடினம்.
- இருவருடைய இருதயமும் ஒன்றாக இருந்தது.
- சபையில் தன் புருஷனோடு இணைந்து இணக்கமாக ஊழியம் செய்தாள்.
- இருவரும் ஒருமித்தவர்களாக கிறிஸ்துவை தங்களுக்கு முன் வைத்திருந்தார்கள்.
- வேதாகமத்தில் இவர்கள் இருவரைப் பற்றி கூறுகையில் எங்கும் ஒருபோதும் தனித்தனியாகக் குறிப்பிடப்படவில்லை.
- இருவரும் ஒரே மாம்சம் என்றும் இரட்டை நட்சத்திரங்கள் (Twin Stars) என்றும் விவரிக்கப்படுகின்றனர்.
- இருவரும் எல்லா தொழில்களிலும் இணைந்தே வேலை செய்தார்கள்.
- பிரிஸ்கில்லாள் கர்த்தருக்குள் தன் புருஷனோடுகூட ஒரே மனதுடையவளாகவும், பணிவுடனும், அடக்கத்துடனும் குற்றஞ்சாட்டப்படாதவளாக இருந்தாள்.
- கிறிஸ்துவுக்கு முன்பாக தன்னுடைய உதடுகளினால் மட்டுமல்லாது, கிரியையினாலும் வார்த்தைகளினாலும் ஊக்கத்துடன் முயற்சி செய்யும் உண்மையுள்ள தம்பதியராய் இருந்தனர்.
- இவர்கள் எப்போது கர்த்தருடையவர்களாக மாறினார்கள் என்று சொல்லப்படவில்லை, ஆனால் பிரிஸ்கில்லாளுடைய புருஷன் ஆக்கில்லா 70 சீஷர்களில் ஒருவனாகக் கருதப்படுகிறான்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இவளுடைய குணாதிசயங்கள் கிறிஸ்தவ ஸ்திரீகளாக தன் புருஷனோடு கூட ஊழியத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவருக்கும் மிகவும் பிரயோஜனமுள்ளவைகளாக இருக்குமென நம்புகிறேன்.

விட்டு விட்டு இருக்கிறீர் மேலும் வரவிருக்கும் காலங்களையும் மனுஷரித்தில் விட்டு இருக்கிறீர்???

"ஆம்", கர்த்தர் பதிலளித்தார்.

"ஆனால் நிச்சயமாக - இக்காரியத்தில் உம்மை தோற்கடிப்பார்கள் - நிச்சயமாக, நீர் வேறொரு திட்டம் கொண்டுள்ளீர்".

"இல்லை - நான் வேறொரு திட்டத்தினை கொண்டிருக்க வில்லை...."

**நம்மிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பினை நாம் எவ்வாறு செய்யப் போகிறோம்?**

**சந்தா செலுத்திவிட்டீர்களா?**

The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



## ஜெபியுங்கள்

- வரவிருக்கும் புதிய ஆட்சிக்காக...
- சுவிசேஷ ஊழியங்கள் தங்குதடையின்றி நடைபெற...
- நமது மாத இதழின் வாசகர்களுக்காக...
- நமது YouTube ஊழியங்களுக்காக...
- நமது மாத இதழின் ஆசிரியர் நடத்திவரும் சபைக்காக...
- நமது தொலைக்காட்சி ஊழியங்களுக்காக...
- வேர்ல்டு இவான்சலிசம் வேதாகம பள்ளிக்காக...



## தெரிந்து கொள்ளுவோம்

*- K.R.K.Ravi Asir*

- ஸ்பெயின் நாட்டின் பிரபலமான நடனத்தின் பெயர் பிளமிங்கோ.
- உலகளவில் மீன் உற்பத்தியில் இரண்டாவது இடம் வகிக்கும் நாடு இந்தியா
- லட்சத்தீவில் பேசப்படும் மொழி மலையாளம் ஆகும்.
- எவரெஸ்ட் சிகரத்தில் இருமுறை ஏறியமுதல் நபர் நவாஸ் கோம்பு ஆவார்.
- டெல்லி செங்கோட்டையைக் கட்டி முடிக்க 7 வருடங்கள் ஆனது.
- ஜெர்மன் நாட்டில் ஓடும் ஒரு நதியின் பெயர் 'ஆ'.
- இனிக்கும் கரும்பின் மற்றொரு பெயர் 'சொர்ண சீரகம்'.



# கிறிஸ்தவம் ஏன் மிகவும் வித்தியாசமுள்ளதாயிருக்கிறது

## Why Christianity Is So Different

*-J.C.Choate*




கிறிஸ்தவம் உலகம் முழுவதிலும் காணப்படுகிறது. கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டவர்கள் லட்சம் லட்சங்களான எண்ணிக்கையில் உள்ளனர். இதன் அங்கத்தினர்களாக இதனுடைய செய்தியை எடுத்துச் சென்று, இதனுடைய அங்கத்தினர்கள் தொடர்ந்து வளர்ந்து வருகின்றனர்.

கிறிஸ்தவம் கிறிஸ்துவில் உள்ள நம்பிக்கையின் அடிப்படையிலானது - மற்ற மனுஷரில் அல்ல, மற்ற பரிசுத்த மனுஷரில் அல்ல அல்லது மற்ற தீர்க்கதரிசியிலும்கூட அல்ல, ஆனால் உலகத்தின் பாவங்களுக்காக மரித்தவரும் என்றென்றும் வாழும்படி கல்லறையினின்று உயிர்த்தெழுந்தவருமாயிருக்கிற தேவனுடைய குமாரனாயிருக்கிறவரில் உள்ள நம்பிக்கையின் அடிப்படையிலானது. கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று பேதுருவும் அப்போஸ்தலர்களும் அறிக்கையிட்டார்கள் (மத்.16:16-18). தேவனும்கூட கிறிஸ்து தம்முடைய குமாரனென்று வானத்திலிருந்து வெளிப்படையாகத் தெரிவித்தார் (மத்.17:5).

இன்று உலகத்தில் ஒரு உயிருள்ள தலைவரைக் கொண்டிருக்கிற ஒரே சமயம் கிறிஸ்தவமே. மற்ற சமயங்களின் தலைவர்களெல்லாம் மரித்தவர்களாகவும், மீண்டும் உயிரோடே எழாதவர்களாயுமிருக்கிறார்கள். கிறிஸ்து தாம் மரித்தோரிலிருந்து திரும்பவும் வருவேன் என்று சொன்னார். அந்தபடியே உயிர்த்தெழுந்தார் (யோவா.11:25; மத்.28:1-6) அவர் தம்முடைய வாக்குத்தத்தை நிறைவேற்றாதவராயிருந்திருந்தால்; அவர் பொய்யராகவும், வஞ்சகராகவும் இருந்திருப்பார். அவர் உயிர்த்தெழாதிருந்தால், கிறிஸ்தவம் ஒருபோதும் வளர்ந்திருக்காது. ஆனால் கிறிஸ்தவம் உயிர்வாழ்கிறது. சபை உயிர்வாழ்கிறது, பொதுவான உயிர்த்தெழுதலின் நம்பிக்கை உயிர்வாழ்கிறது, கிறிஸ்து ஜீவிக்கின்றபடியால் எல்லாமே உயிர் வாழ்கின்றது.

கிறிஸ்தவம் ஒரு பிரபல்யமான சமயம். வேறு எந்த ஒரு சமயம் அல்லது நம்பிக்கையைக் காட்டிலும் கிறிஸ்தவமானது நன்மையானவற்றிக்காக உலகத்தை மாற்ற பலவற்றைச் செய்திருக்கிறது. உலகின் சர்வதேச பஞ்சாங்கம் தங்களுடைய காலங்களை கிறிஸ்துவின் ஜீவியம் மற்றும் மரணத்தின் அடிப்படையிலே நிர்ணயம் செய்துள்ளது. தேசங்களின் சட்டங்கள் பெருமளவு கிறிஸ்துவின் நீதி போதனைகளினாலே வசீகரசக்தி பெற்றுள்ளது. கிறிஸ்து வாரத்தின் முதல்நாளில் கல்லறையிலிருந்து உயிரோடே வெளிப்பட்டார் என்ற உண்மையின் அடிப்படையிலும், மேலும் கர்த்தர் தம்முடைய சீஷர்கள் தம்மை நினைவுகூரும்படி, தேவனை ஆராதிக்கும்படி வாரத்தின் முதல் நாளில் கூடிவர தம்முடைய ஜனங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார் என்பதின் அடிப்படையிலும் (மத்.28:1-6; அப்.20:7) அதிகமான நாடுகள் ஞாயிற்றுக் கிழமையை விடுமுறை நாளாக அங்கீகரிக்கிறது. இது நிச்சயமாகவே கிறிஸ்தவத்திலிருந்து வந்தது.

கிறிஸ்தவம் மனிதனுக்கென்று அறியப்பட்டுள்ள மிக மேன்மையான நீதி கொள்கைகளை ஆதரிக்கிறது. இது நேர்மை, ஒருவனுடைய கடனைத் திரும்பச் செலுத்துதல், வேலைக்குக் கூலி கொடுத்தல், ஒருவரை ஒருவர் கனம்பண்ணுதல்

போன்றவற்றை போதிக்கிறது. இது நல்லொழுக்கத்தையும், குடும்ப மேன்மையையும் ஆதரிக்கிறது. மேலும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமண பந்தத்தை ஆதரிக்கிறது அத்தோடு அவர்கள் ஒருவருக்கொருவர் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. இது எல்லாருக்கும் தேவன் தலைவராயிருக்கிறார், மனைவிக்கு புருஷன் தலைவராயிருக்கிறான் என்பதை அங்கிகரிக்கிறது ஆனால் மனுஷனும் ஸ்திரீயும் தங்களுக்கென்று பொறுப்புகளைப் பெற்றிருக்கிறார்கள் மேலும் தங்களுடைய பிள்ளைகளைப் போஷித்து தேவனுக்கேற்ற புத்திமதியில் வளர்க்கும் பொறுப்புகளையும் பெற்றிருக்கிறார்கள்.

கிறிஸ்தவம் ஒரு சமயம், தேவனுக்கும் மனிதனுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அன்புப் பணி என்பதே சமயத்தின் அர்த்தமாயிருக்கும். யாக்கோபு, “திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது” என்றார். இதன் பொருள் சமூக சேவை செய்வதைக் காட்டிலும் திக்கற்ற பிள்ளைகளையும் விதவைகளையும் சந்திப்பதே மேன்மையானது என்பதாகும். இதன் பொருள் தேவையிலிருக்கும் ஜனங்களை விசாரிப்பதாகும். கிறிஸ்தவர்கள் தங்களால் இயன்ற அளவிற்கு மற்றவர்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு கடமையுணர்ச்சியைக் கொண்டுள்ளனர். பவுல், “ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்” (கலா.6:2) என்றார்.

எல்லாவற்றையும் சிருஷ்டித்தவராகிய தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாக கிறிஸ்தவத்தை எடுத்துச் சொல்லுகிறவர்கள், மனுஷரோடு வாசஞ்செய்யும்படிக்கும் உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையிலே மரிக்கவும் உலகத்திற்கு அனுப்பப்பட்டவராகிய கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கின்றனர். கிறிஸ்து சொல்லும்போது; “ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்” (யோவா.8:24). தேவனுடைய வார்த்தையை எழுதும்படிக்கு பரிசுத்த ஆவியானவர் எண்ணிலடங்கா விஷயங்களை பல நூறு ஆண்டுகளுக்கும் மேலாகவே உணர்த்தினார் என்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர், ஆனபடியினால் வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது, எனவே இது தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது (2பேது.1:21; 2தீமோ.3:16,17; மத்.24:35). கிறிஸ்து தம்முடைய சபையை ஸ்தாபித்தார் என்றும், அது ஒரே ஒரு சபையென்றும், இரட்சிக்கப்படுகிறவர்கள் அதில் சேர்க்கப்படுகிறார்களென்றும் நாம் விசுவாசிக்கிறோம் (மத்.16:18; எபே.4:4-6; அப்.2:47). கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மேலும் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொண்டு அதுவே உலக முழுவதுக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டிய நற்செய்தியாயிருக்கிறது என்று விசுவாசிக்கிறோம். மேலும், “பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்; (மாற்.16:15,16) என்றார். கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்கள்



இருக்கிறோம்? ஒரு ஆத்துமாவும் வீழ்ந்து போய் இழந்து போனதாக இருக்காது!

நமது கர்த்தர் பரத்துக்குத் திரும்பிப்போகும் முன்பு, அவர் என்ன செய்தார்? "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்" (மத்.28:18-20).

ஆதி முதற்கொண்டே பாவம் நிறைந்த மனுஷரை தம்மிடமாகத் திரும்பச் சேர்த்து கொள்ளும் வழியை தேவன் தம்முடைய நோக்கமாகக் கொண்டிருந்தார். அது ஜனங்களாக சுவிசேஷத்தைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படியும்போது மட்டுமே, அவர்கள் சபையாகிய தேவனுடைய குடும்பத்தில் ஒரு குழந்தையாக இருக்க முடியும் என்பதாகும். அவர் தேவையான வழிகாட்டுதலுக்காக புதிய ஏற்பாட்டினைத் தந்துள்ளார், ஆனால் உலகத்திற்கு இந்தச் செய்தி சென்றடைவதற்கானப் பணி மனுஷருடைய கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது!

இதைக் குறித்து சிந்தியுங்கள்! காலங்காலமாக தேவனுடைய ஒட்டுமொத்த பணி, இரட்சிப்பின் நித்திய ஈவு **நம்முடைய கரங்களில்** கொடுக்கப்பட்டது!

இதற்காக நாம் என்ன செய்யப்போகிறோம்? இதை அமைதியாக, அலட்சியத்துடன், இச்செய்தி நம்மோடு கூட மரிக்கும்படி பிடித்துக் கொள்ளப் போகிறோமா - அல்லது இழந்து (கெட்டுப்) போயிருக்கிற உலகத்தில் தேவனுடைய சப்தமாக இருக்கப்போகிறோமா?

தேவதூதர்கள் மனுஷ சாயலில் பிறந்த இயேசுவின் பிறப்பினைக் கவனித்துக் கொண்டிருந்தனர் என்று கூறப்பட்டிருக்கிற நிகழ்வுகள், போதனையில் அவருக்குச் செவிசாய்ப்போர் அவருடைய செயல்களைக் கண்டனர். அவர்கள் அவருடைய மரணத்தில் மன உளைச்சளுக்கு ஆளாகி, அதன்பின் அவர் கல்லறையை விட்டு எழுந்தபோது ஜெயத்தில் சந்தோஷமடைந்தனர்! வெற்றி! அவர் பரத்திற்கு ஏறிச் சென்று அவருடைய சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டபோது, ஆவலுடன் அவரிடத்தில் நெருக்கிக் கொண்டு சென்றனர்.

"இப்போது எல்லா நேரங்களிலும் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை நாம் அறிவோம்"! அவர்கள் கதறினார்கள். "அவர்களை இரட்சிக்கும்படி நீர் மரித்திருக்கிறீர் என்று வெளியே சென்று உலகத்திற்கு சொல்லுவோம்"! என்றனர்.

"இல்லை", இயேசு பதிலளித்தார். "இது உங்களுடைய வேலை அல்ல".

"பிறகு யாருடைய வேலை இது?" அவர்கள் குழப்பத்துடன் கேட்டனர்.

"நான் இந்த வேலையை என்னுடைய சீஷர்களின் கரங்களில் விட்டு விட்டேன்".

என்ன??? நீர் உம்முடைய அநாதி வேலையை மனுஷருடைய கரங்களில் விட்டு விட்டீரா? அவர்கள் நம்பிக்கையில்லாதவர்களாய் கேட்டனர்.

"ஆம்" இயேசு பதிலளித்தார்

"ஆனால், கர்த்தாவே", தேவதூதர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர், "நீர் மனுஷரை நம்ப முடியாது! ஆதாமும் ஏவாளும் உலகத்திற்குள் பாவத்தைக் கொண்டுவந்தனர். யூதாஸ்காரியோத் உம்மைக் காட்டிக் கொடுத்தான். சீமோன் பேதுரு கூட உம்மை மறுதலித்தான் - அவனுடைய கரங்களில் எல்லாவற்றையும்

பெண்கள் பகுதி

## ஒரு கிறிஸ்துவளாக என்னுடைய சொந்த வாழ்க்கையும் வளர்ச்சியும்
### My Personal Life and Development As a Christian

*-Betty*



**-சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

**III உலகத்தில் வேலை:**

தோழிகளோடும், அண்டைவீட்டாரோடும், தன் உடன்பணியாளர்களோடும் செயல்படும் கிறிஸ்தவ பெண் சுவிசேஷ விஷயத்தில் மட்டும் தொடர்பு வைக்கிறவர்களாக இருக்கலாம்.

1. அவர்கள் முன்பு கிறிஸ்தவ வாழ்க்கை முறையில் வாழ்ந்து காட்டுங்கள்.

2. சபையில் செய்யும் உங்களுடைய செயல்பாடுகளில் அல்லது மற்ற சில வேலையில் சமயக் கருத்துக்களைக் கொண்டு வருவது குறித்து வெட்கப்படாதீர்கள். நாம் செய்கின்ற வேலைகளைக் குறித்து மற்றவர்களுடன் எப்போதும் பேசுகிறோம், அதே வழக்கமான முறையில் நான் ஒரு கிறிஸ்தவப் பெண்ணாக நடந்துகொள்ளும் செயல்பாடுகள் குறித்து அவர்கள் கற்றுக் கொள்ள உதவிடலாம்.

3. நான் அண்டை வீட்டாருக்கும், மற்ற நண்பர்கள் மத்தியிலும், நம்மை பார்க்க வருகிறவர்கள் மத்தியிலும் எப்போது "கதவைத் தட்டுகின்ற" வகையில் வேலையில் ஈடுபாட்டுடன் இருக்கலாம். அவர்களை வாராந்திர ஆராதனைக்கு அல்லது விசேஷக் கூட்டங்களுக்கு அழையுங்கள்.

4. நான் (வாராந்திர) வேதபாட வகுப்பிற்கு என்னுடைய வீட்டில் அண்டையிலுள்ளோர் கூடிவருவதை ஊக்கப்படுத்த முடியும்.

5. அண்டையிலுள்ளோர் மற்றும் அறிமுகமானவர்கள் நோயுற்றிருக்கையில் அல்லது சில முக்கிய தேவையில் இருக்கையில் அல்லது துக்கமான சூழலில் என்னால் முடிந்த உதவி செய்ய முடியும். இது கிறிஸ்தவளின் கரிசனையின் வெளிப்பாடு தேவனுடைய அன்பின் இருதயத்தை நேர்த்தியாக காட்டவும் கிறிஸ்தவர்களுக்கும் உலக மக்களுக்கும் இடையே ஆன ஆழமான வேறுபாட்டிற்கும் மாதிரியாக இருக்கும்.

**முடிவுரை:** மனிதப் படைப்பினை நாம் முழுமையாக்குவோம் என அறிந்து தேவன் பெண்ணைப் படைத்தார். மனுஷருக்கு நாம் "தாழ்ந்தவர்" ஆக அல்லது "இரண்டாம் வகுப்பு" குடிமகள்களாக இருக்கிறோம் என நம்மை நாமே ஒருபோதும் கருதக்கூடாது. மனுஷி இல்லாமல், மனிதவர்க்கம் அழிந்துபோகும்! பெண் இனம் இல்லாமல் முழு உலககலாச்சாரம் சோதோம் கொமோராவைப் போல மாறிவிடும் மேலும் ஒட்டு மொத்த உலகமும் தேவனால் அழிக்கப்பட்டு போய்விடும்! நாம் பெண் இனமாகவே இருக்க தேவன் விரும்புகிறார். திருமணத்தில் தெய்வபக்தியில்லாத ஸ்திரீகளால், வீடு, குடும்பம் மற்றும் உலகம், இந்த ஆண் பெண் உறவுமுறைகளுக்கான தேவனுடைய திட்டம் முழுவதும் தோல்வியடைந்து விடும். நாம் செய்யும்படிக்கு மேன்மையான (முக்கியமான) பணியினை உடையவர்களாக இருக்கிறோம். நாம் இதை விட்டு விட்டு ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு நிமிடத்தையும் இப்பணிகளை நாமே செய்யும்படிக்கு மீதமுள்ள நம்முடைய வாழ்வினை அர்ப்பணிப்போமாக!

**சமுதாயத்தில் கிறிஸ்தவளாக நம்முடையப் பணி:** ஞானஸ்நானத்திற்குப் பின்பு, உடனடியாக நாம் ஒவ்வொருவரும் இயேசு இரட்சிக்கப்பட்டவர்களுக்காக ஆயத்தப்பண்ணிக் கொண்டிருக்கிற அந்த புதிய உலகத்திற்குக் கொண்டு செல்லப்படுவோமானால் நாம் ஏன் இந்த உலகத்தில் கைவிடப்பட்டவர்களாக



இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்தவர்களாக மட்டுமே மாறி, வாரத்தின் முதல் நாளில் தேவனை ஆராதித்து, அவர்கள் அனுதினமும் கிறிஸ்துவுக்காக வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என விசுவாசிக்கிறோம் (மத்.7:21; 1பேது.4:16; யோவா.4:24; அப்.20:7; லூக்.9:23).

கிறிஸ்தவம் கிறிஸ்துவுக்குள் இருக்கிற எல்லாவிசுவாசிகளின் ஒற்றுமையை ஆதரிக்கிறது (1கொரி.1:10), மேலும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள். பவுல், "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலா.3:26-28) என்று எழுதினார்.

ஒருவன் வெளிப்படையான சரீரப்பிரகாரமாக தேவனுடைய குடும்பத்தில் பிறக்கமுடியாது ஆனபடியால் கிறிஸ்தவம் சரீரப்பிரகாரமான பிறப்பின் மூலம் வளருகிறதில்லை ஆனால் ஆவிக்குரிய பிறப்பின்மூலம் வளர்கிறது (யோவா.3:3-5). வேறுவார்த்தையில், கர்த்தர் தம்முடைய சீஷர்களை தம்மைப் பற்றி ஜனங்களுக்குப் போதிக்கும்படி, அவர்களிடத்தில் விவேகத்துடன் விளக்கவும், கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் கொள்வது அவர்களுக்கு அவசியம் என அவர்களை நம்பச்செய்யவும், அவருக்குக் கீழ்ப்படியபண்ணவும் ஜனங்களை அனுப்புகிறார். அப்போது தான் கிறிஸ்து அவர்களை இரட்சித்து அவர்களை தம்முடைய பிள்ளைகளாக உருவாக்கமுடியும். பவுல் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதின் மூலம் விசுவாசம் வருகிறது என நமக்கு நினைப்பூட்டுகிறார் (ரோ.10:17), எபிரெய எழுத்தர் விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் என்கிறார் (எபி.11:6). மீண்டும், எபிரெய எழுத்தர் கிறிஸ்துவைக் குறித்தும் அவருடையவர்களாக இருப்பவர்களைக்குறித்தும், "அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி" (எபி.5:8,9) என்றார். அதன் பொருள் சிறு பிள்ளைகள் அல்லது குழந்தைகள் கிறிஸ்தவர்களாக அல்லது சபை அங்கத்தினர்களாக மாறமுடியாது. அவர்கள் தீமையிலிருந்து நன்மையை அறியும்படிக்கும் கிறிஸ்துவின் போதனையைக் கேட்கும்படிக்கும், அவர்கள் தாமாகவே கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்குக்கீழ்ப்படியவேண்டும் அல்லது வேண்டாம் எனத் தீர்மானிக்கும்படிக்கும் வளரவேண்டும்.

கிறிஸ்தவம் எல்லாரும் முடிவிலே உயிர்த்தெழுவார்களென்றும், அங்கே எல்லாருக்கும் ஒரு நியாயத்தீர்ப்பு உண்டென்றும், எல்லாரும் நித்தியத்தை பரலோகத்தில் அல்லது நரகத்தில் கழிப்பார்களென்றும் போதிக்கிறது. கிறிஸ்து, "இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவா.5:28,29) என்றார். நாமும் இதை வாசிக்கிறோம்: "ஏனென்றால், ஒரேதரம் மரிப்பதும், பின்பு

நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே'' (எபி.9:27). பவுல் ''ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்'' (2கொரி.5:10) என்று வெளிப்படையாகக் கூறுகிறார். நியாயத்தீர்ப்பு நடைபெற்ற பின்பு, துன்மார்க்கர் நித்திய ஆக்கினைக்குள்ளாக அனுப்பப்படுவார்கள் ஆனால் நீதிமான்களோ நித்திய ஜீவனைப் பெறுவார்கள் (மத்.25:46).

கிறிஸ்தவம் எதிர்க்கிற காரியங்களும் உண்டு. இது சாத்தானையும், உலகத்தையும் அதின் மாம்சக்கிரியைகளையும் எதிர்க்கிறது (1யோவா.2:15-17: கலா.5:19-21). மிகவும் குறிப்பாக, இது போர், லஞ்சம், புகைப்பிடித்தல், சூதாட்டம், மதுஅருந்துதல், போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல், கருக்கலைப்பு, சுயபுணர்ச்சி, இது போன்ற பலவற்றிற்கும் எதிர்த்து நிற்கிறது. இது ஜாதிமுறைமையையும், விக்கிரகாராதனையையும், எல்லா தவறான சமயங்களையும், மனுஷருக்கு முன்பாக தங்களை கடவுள்கள் என்று காண்பிக்கிறவர்களையும் புறக்கணிக்கிறது. இது மறு அவதாரத்திலும், இந்த ஜனங்கள் மாம்சம் புசிக்கிறதை தவிர்ப்பதிலும் நம்பிக்கைகொள்கிறதில்லை. பவுல் சிலர் விவாகம் பண்ணாதிருக்கவும் மாம்சம் புசியாதிருக்கவும் கட்டளையிடுகிறார்கள் ''தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல'' (1தீமோ.4:3-5) என்றார்.

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாங்கள் தேவனுடைய வார்த்தையில் இடம்பெறாத எல்லா கிறிஸ்தவ அமைப்புகளையும் எதிர்க்கிறோம். வேறு வார்த்தையில், அதிகமாய் உலகத்திற்கு ஒத்த தோற்றமுடைய கிறிஸ்தவம் தவறான கிறிஸ்தவமாயிருக்கிறது. இது உண்மையாயிருப்பதினால் கிறிஸ்தவம் கெட்ட பேரை சம்பாதிக்கிறது. கிறிஸ்தவர்கள் இதைச் செய்கின்றனர், அதைச் செய்கின்றனர், எதுவெல்லாம் தீமையானதும், தவறானதுமாக இருக்கிறதோ அதையெல்லாம் செய்கின்றனர் எனக் கேள்விப்படுகிறோம். மேலும் இது உண்மை கிறிஸ்தவத்தை வெளிப்படுத்துகிறதில்லை. வேதாகம கிறிஸ்தவமும், அதை வழக்கப்படுத்திக் கொள்ளுகிறவர்களும் நன்மைக்கென்றே அறியப்பட்டவர்கள், அதை அவர்கள் செய்து இவ்வாறாக தாங்கள் வாழும் உலகத்தை சிறப்பானதாக உருவாக்குகின்றனர். ஆனபடியால், தேவனுடைய வார்த்தை மனிதனால் உருவாக்கப்பட்ட கிறிஸ்தவத்திற்கும் பிரிவினை சபைகளுக்கும், அமைப்புகளுக்கும் எதிராக போதிக்கிறது.

உலக சமயங்களை அல்லது கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என உரிமைபாராட்டுகிற மனுஷ பிரிவினைகளை நாம் நம்புகிறதில்லை, ஆனால் நாங்கள் சமய சுயாதீனத்தில் விசுவாசம் கொள்கிறோம். தேவன் தாமே உலகத்தின் தவறான மார்க்கங்களை அங்கிகரிக்கிறதில்லை, ஆனால் அவர் ஒவ்வொரு மனுஷனையும் அவன் தம்மை சேவிக்க அல்லது தம்மை புறக்கணிக்க அவனுடைய தீர்மானத்திற்கு விட்டுவிடுகிறார். ஒரு மனிதனும் தன்னுடைய மார்க்கத்தை மற்றவன் மேல் திணிக்க அதிகாரம் கொண்டிருக்கவில்லை. மனிதன் தான் செய்யவிரும்புகிற வண்ணமாக தன் ஆத்துமாவில் செய்ய சுதந்திரம் பெறும்வரை அவன் உண்மையாக சுதந்திரமாக இல்லை (யோவா.8:32) மனிதனுக்கு தேவனை அறிமுகப்படுத்துகிறதும் அவன் தன் பாவங்களிலிருந்து எவ்வாறு விடுதலை அடைய முடியுமென்கிறதுமான தேவனுடைய வார்த்தையின்



அ) அவர் பிரமாணங்களை உருவாக்கினார்

ஆ) அவர் பிரமாணங்களை வெளிப்படுத்தி வியாக்கியானம் செய்தார்

இ) அவர் பிரமாணங்களை அமல்படுத்துகிறார்.

சபையிலே ஆளுகையின் கிளைகளில் எல்லா நிலைகளையும் உபயோகித்துக் கொள்கிறார். அவர் ஆசீர்வதிக்கப்பட்டவர், அவரே ஏக சக்ராதிபதி, ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர் என்று அழைக்கப்படுகிறார் (1தீமோ.6:15). அவர் பூமியின் இராஜாக்களுக்கு அதிபதியாக இருக்கிறார் (வெளி.1:5) சபை அலுவலர்களில் எவர் ஒருவரும் அவருடைய பிரமாணங்களை எழுதவில்லை. பரிசுத்தாவியானவர் அவருடைய பிரமாணங்களை அப்போஸ்தலருடைய எழுத்துக்கள் மூலமாக வெளிப்படுத்தினார் அல்லது வியாக்கியானம் செய்தார் (யோவா.16:13). கிறிஸ்துவின் போதனைகள் கடைசிநாளிலே மனித இனத்தை நியாயந்தீர்க்கும் (யோவா.12:48). நாம் அனைவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக நிற்கவேண்டும் (2கொரி.5:10). இயேசு நம்முடைய இராஜாவாக, ஆண்டவராக, தலைவராக மற்றும் ஆளுகை செய்கிறவராக இருக்கிறார். அவருடைய சபையானது ஓர் இராஜ்யமாக இருக்கிறது, அதினுள்ளே கிறிஸ்தவர்கள் ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள் (கொலோ.1:13). இந்த இராஜ்யத்தின் உள்ளாக பிரவேசிக்கிற அனைவரும் அவர்கள் இருக்கிற இராஜ்யத்தின் தன்மையை உணர்ந்தவர்களாயிருக்கிறார்கள். ஒருவரும் சபைக்குள்ளாக அதின் பிரமாணங்களை உருவாக்குவதற்காக பிரவேசிக்கிறதில்லை. சபைக்குள்ளே கர்த்தரால் சேர்க்கப்பட்ட அனைவரும் தாழ்மையுள்ள ஊழியர்களாகவும் இராஜாவாகிய இயேசுவுக்கு கீழ்ப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

**கேள்விகள்**

1. "ஆளுகை இல்லை" என்ற வார்த்தை எதைக் குறிப்பிடுகிறது?-------- .--------.

2. எந்த வார்த்தை "தன்னாட்சி" யை குறிப்பிடுகிறது? --------------.

3. எந்த வார்த்தை "அரசாட்சியை" குறிப்பிடுகிறது?

4. அரசாங்கத்தின் எந்த கிளையானது சட்ட திட்டங்களை அமல்படுத்துகிறது? --------.

5. அரசாங்கத்தின் எந்த கிளையானது பிரமாணங்களை வியாக்கியானம் செய்கிறது? ---------.

6. அரசாங்கத்தின் எந்த கிளையானது சட்டங்களை இயற்றுகிறது? ----- -----.

7. 1தீமோ.6:15 இயேசுவை -------------- என்றும் ----------- என்றும் அழைக்கிறது.

8. யோவான் 12:48ல் இயேசு சொன்னார் ---------,------- கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் என்றார்.

9.கொலோ.1:13 சொல்கிறது நாம் ----------- ----------------- உட்படுத்தப்பட்டிருக்கிறோம்.

10. கிறிஸ்துவின் இராஜ்யம் ஒரு மக்களாட்சியாய் இருக்கிறதா? --------- ------.

மக்களாட்சி என்பது பூமிக்குரிய அரசாங்கங்களுக்கு ஒரு நல்ல வகையான ஆளுகையாக இருக்கிறது, ஆனால் சபைக்கு அல்ல.

கிறிஸ்துவின் சரீரம் ஒரு முடியாட்சியாக இருக்கிறது. ஒரு முடியாட்சி என்பது ஒரு இராஜாவினால் ஆளுகை செய்யப்படுகிறது. ஒருவரே முழுமையான அதிகாரம் உடைய ஒரு அரசாங்கமாக இது இருக்கிறது. ஒரு மெய்யான முடியாட்சி செய்கிறவருக்கு அவருடைய இராஜ்யத்திலே சகல அதிகாரமும் உள்ளது. அவருடைய உரிமை அல்லது ஆளுகை செய்யும் விதத்தைக் குறித்து கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறதில்லை. இது கிறிஸ்துவின் இராஜ்யமாகிய அவருடைய சபையிலே நாம் அவருடைய ஆளுகையை அதன் சரியான வெளிச்சத்திலே காண உதவியாயிருக்கிறது. இயேசு வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் உடையவராயிருக்கிறார் (மத்.28:18). அவர் நம்முடைய இராஜாவாகவும், நம்மை ஆண்டு கொள்கிறவராகவும் இருக்கிறார் (யோவா.18:37). நாம் அவருடைய இராஜ்யம் அல்லது சபையின் குடிமக்களாக இருக்கிறோம் (மத்.16:18,19). சபையானது கிறிஸ்துவை பூரணமான இராஜாவாகக்கொண்ட ஒரு முடியாட்சியாக இருக்கிறது. அவரே சகல வல்லமையும், அதிகாரமும் உடையவராக இருக்கிறார்.

**2. சமுதாயத்துக்குரிய அரசாங்கத்தின் கிளைகள் என்னென்ன?**

சமுதாயத்துக்குரிய அரசாங்கத்தின் கிளைகள் அல்லது பாகங்களாவன:

அ) சட்டம் இயற்றும் தகுதியுடையது

ஆ) நீதிக்கு சம்பந்தமானது

இ) கொள்கைகளை நிறைவேற்றக்கூடியது அல்லது அமல்படுத்தக்கூடியது.

நீதிக்கு சம்பந்தமான கிளையானது தேசத்தின் பிரமாணங்களை பரிசோதித்து அறிகிறது அல்லது வியாக்கியானம் செய்கிறது. வழக்கமாக இந்த கிளையானது மக்கள் கூடும் சங்கம் நீதிக்கு சம்பந்தமான கிளையானது தேசத்து ஜனங்களை நியாயந்தீர்க்கிற நீதிமன்றங்களின் பிரமாணங்கள். சட்டம் இயற்றும் தகுதியுடைய அமைப்பே தேசத்தில் சட்டம் இயற்றுகிறது. இது தேசத்தின் சட்டங்களை எழுதுகிறது. அரசாங்கத்தின் கொள்கைகளை நிறைவேற்றக்கூடிய கிளையானது தேசத்தின் சட்டதிட்டங்களை அமல்படுத்துகிறது. ஒரு முதன்மையான மந்திரி அல்லது ஒரு பிரதம மந்திரி போன்ற கொள்கைகளை நிறைவேற்றக்கூடிய ஒருவரால் அடையாளப்படுத்தப்படுகிறது. இந்த மனிதர் இராணுவப்படை அல்லது காவல் துறையின் தலைவராக இருக்கிறார். இவர் தேசத்தின் சட்டதிட்டங்களை அமல்படுத்துகிறார் அல்லது கையாளுகிறார். சட்டம் இயற்றும் தகுதியுடைய கிளையானது சட்டதிட்டங்களை உருவாக்குகிறது. நீதி சம்பந்தமான கிளையானது பிரமாணங்களை வியாக்கியானம் செய்கிறது, கொள்கைகளை நிறைவேற்றக் கூடிய கிளை சமுதாயத்துக்குரிய எந்த ஒரு அரசாங்கத்தின் பிரமாணங்களையும் அமல் படுத்துகிறது.

**3.கிறிஸ்துவின் இராஜ்யம் எவ்வாறு ஒரு முழுமையான (மொத்தமான) முடியாட்சியாக இருக்கிறது?**

கிறிஸ்துவின் இராஜ்யம் அல்லது சபையானது மூன்று காரணங்களுக்காக ஒரு முழுமையான முடியாட்சியாக இருக்கிறது.



மூலம் மெய்யான சுதந்திரம் வருகிறது.

நீ எந்த மார்க்கத்தை பின்பற்றுகிறாய்? ஏன் அதைப் பின்பற்றுகிறாய்? அந்த மார்க்கத்தில் மாம்சத்தில் பிறந்தாயா? அல்லது போதனையின் விளைவாக அதை ஏற்றுக்கொண்டு இது ஒரே மெய்யான வழியைக் காட்டுகிறது என்ற விசுவாசத்திற்குள் வந்திருக்கிறாயா?

உன்னுடைய சமயம் ஞானத்தை உருவாக்குகிறதா? இது இன்றைய நவீன உலகத்தைப்போல் இருக்கிறதா அல்லது இது நீ ஜீவிக்கும்படி கடந்த காலத்திற்கே உன்னை கொண்டு செல்கிறதா? உனக்கு அறிவை உணர்த்தும் அவசியமான காரியங்களைக் கொண்டிருக்கிறதா அல்லது இது பொருத்தமில்லாத உன்னை முட்டாளாக்கக் கூடிய காரியங்களைச் செய்யும்படி வழிநடத்துகிறதா?

ஜனங்கள் ஒரு குறிப்பிட்ட நிலை இருந்தால் மட்டுமே வாசிப்பதற்கும், படிப்பதற்கும் தங்களுடைய சுய தீர்மானங்களை உருவாக்குவதற்கும் தருணங்களைக் கொண்டிருக்க வேண்டுமென்று பயப்படுவதற்கு கிறிஸ்தவத்தில் ஒன்றுமில்லை. கிறிஸ்தவம் பொருத்தமுள்ளது, அறிவுப் பூர்வமானதென்று நாங்கள் நம்புகிறோம். இதற்கும் மேலாக, கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர் களையும் கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களையும் பாருங்கள், எந்த சமயம் அவர்களுக்காக கிரியை நடப்பிக்கிறது என்றும் கவனியுங்கள். நீங்கள் இதை பயிற்சிக்கும்போது, அதிகமான மாற்றங்கள் மூலம் இதன் ஜனங்கள் நன்மைக் காகவும், இது இவர்களை சரீரப்பிரகாரமாகவும் ஆவிக்குரியபிரகாரமாகவும் நல்வாழ்விற்கு வழிநடத்துகிறது நிச்சயமாக கிறிஸ்தவம் என்றும் காண இயலும். இந்த ஜனங்கள் அவர்கள் வாழ்விற்கென்று அதிகமாகப் பெற்றிருப்பதாலும், வருங்காலத்திற்கென்றும் எல்லாவற்றையும் பெற்றிருப்பதாலும் மற்றவர்களைக் காட்டிலும் சந்தோஷமிக்கவர்களாக இருக்கின்றனர்.

நீ கிறிஸ்துவில் விசுவாசியாக இல்லாவிட்டால், கிறிஸ்தவத்தைக் குறித்து ஆராய்ந்து பார்க்கும்படி உன்னை உற்சாகப்படுத்துகிறேன். வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டுப் பகுதியில் இது குறித்து வாசி. நீ அப்படி வாசிப்பா யென்றால், நீ ஒரு கிறிஸ்தவனாக மாற விரும்புவாய் என்று நான் நம்புகிறேன். இதற்கும் மேலாக, நீ தேவனிடத்திலும் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து வினிடத்திலும் விசுவாசம் கொள்வதின் மூலமும், உன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்புவதின் மூலமும், கிறிஸ்துவை உன் வாயினாலே அவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடுவதின் மூலமும், உன் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதின் மூலமும் நீ கிறிஸ்தவனாக மாறமுடியும் (எபி.11:6; யோவா.14:1-3; அப்.17:30; ரோம.10:10; அப்.2:38). நீ இதைச் செய்யும்போது, கர்த்தர் உன்னை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்ப்பார், இவ்வாறாக நீ ஒரு கிறிஸ்தவனாக மாறி கிறிஸ்தவத்தின் ஒரு அங்கமாவாய் (அப்.2:47; 1பேது.4:16). இது எளிமையானதில்லையா? இது மிகவும் எளிமையானதும் குழப்பமற்றதுமாகும். இது குறித்து தடுமாறாதே.

நடப்புச்செய்திகள்

- ❒ நீர் நிலைகளில் ஆட்சேபகரமான பகுதியில் வசிப்பவர்களுக்கு அந்த பகுதியிலேயே பட்டா வழங்க அனுமதி கிடையாது.
- ❒ இந்திய குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் ஆதார் அவசியம் என்று இந்திய ஆதார் ஆணையம் தெரிவித்துள்ளது
- ❒ இந்திய கடலோர எல்லைகளில் சீனா ஆதிக்கம் அதிகரித்தால் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்குமென புகார் எழுந்துள்ளது.

**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**



***தற்சோதனை பகுதி - 31***

**31. மாம்சசிந்தை, ஆவியின் சிந்தை இவைகளின் முடிவு எப்படிப்பட்டது?**

1. மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளை சிந்திக்கிறார்கள் ☐ வசன ஆதாரம் ------------------------------------------------------------

2. மாம்சசிந்தை மரணம் ☐ வசன ஆதாரம் ----------------------------

3. மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருப்பார்கள் ☐ வசன ஆதாரம்------------------------------------------------------------------

4. மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை ☐ வசன ஆதாரம் ---------

5. ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திப்பதில்லை ☐ வசன ஆதாரம் ------------------------------------------------------------

6. ஆவின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை ☐ வசன ஆதாரம் ----------------------------------------------------------------

7. ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கவில்லை ☐ வசன ஆதாரம்----------

8. ஆவியின்சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் ☐ வசன ஆதாரம்-

9. ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள் அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றுவீர்கள் ☐ வசன ஆதாரம் ------------------------------------


10. மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது ☐ வசன ஆதாரம் ------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள்.**
**மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**


**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**




## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் -12**

**சபை எவ்வாறு சமுதாயத்துக்குரிய அரசாங்கங்களோடு ஒப்பிடப்படுகிறது?**

**வரைகுறிப்பு**

**1. சமுதாயத்துக்குரிய அரசாங்கத்தின் வகைகள் என்ன?**
**2. சமுதாயத்துக்குரிய அரசாங்கத்தின் கிளைகள் என்னென்ன?**
**3. கிறிஸ்துவின் இராஜ்யம் எவ்வாறு ஒரு முழுமையான (மொத்தமான) முடியாட்சியாக இருக்கிறது?**

**கலந்துரையாடல்**

**1. சமுதாயத்துக்குரிய அரசாங்கத்தின் வகைகள் என்ன?**

இந்த இடத்தில் தேசங்களிலுள்ள அரசாங்கங்களின் வகைகளை சபையின் ஆளுகையோடு ஒப்பிட்டுப்படிப்பது நன்மையானதாயிருக்கிறது சமுதாயத்துக்குரிய அரசாங்கத்தில் மூன்று பிரதானமான வகைகள் இருக்கின்றன.

அ) அராஜக ஆட்சி
ஆ) மக்களாட்சி
இ) முடியாட்சி

அராஜக ஆட்சி என்பதன் பொருள் "ஆளுகை இல்லை" என்று பொருள். இது ஒரு ஒழுங்கற்ற நிலைமை, எவர் ஒருவரும் ஆளுகை செய்கிறது இல்லை. அங்கே அரசாங்கம் இருக்கிறதில்லை, எந்த ஒரு நபரும் ஆளுகையும் செய்கிறதில்லை ஒரு அராஜக ஆட்சி நிலையில் அங்கே நிறைய குற்றங்களும், கும்பலாக செய்யும் கொடுமைகளும் இருக்கும். அங்கே காவல் துறை சக்தி அல்லது சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்த எந்த ஒரு அதிகாரமும் இருக்கிறதில்லை. நிச்சயம் சபையானது இந்த வகையான நிலைமையில் இருக்கிறதில்லை. 'கர்த்தத்துவத்தை (ஆளுகையை) அசட்டை செய்கிறவர்களை வேதாகமம் கண்டனம் செய்கிறது (2பேது.2:9,10). கிறிஸ்தவம் கிறிஸ்துவின் அதிகாரத்தையும், அவருடைய வார்த்தையையும் அடிப்படையாகக் கொண்டதாயிருக்கிறது. நிச்சயமாக சபையானது ஒரு அராஜக ஆளுகை அல்ல

மக்களாட்சி என்பது ஜனங்களால் ஆளுகை செய்யப்படுவது. இது ஒரு அரசாங்கமாக, யார் ஆளப்படுகிறார்களோ அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டதாக இருக்கிறது. ஒரு மக்களாட்சியில் சுதந்திரமான வெளிப்படையான தேர்தல்கள் இருக்கிறபடியால் ஒவ்வொரு குடிமகனும் ஆள அல்லது யார் ஆளுகை செய்வார்களோ அவர்களை தெரிந்தெடுக்க வாய்ப்பு உள்ளவராக இருக்கிறார். ஆனால் சபையானது ஒரு மக்களாட்சி அல்ல. சபையின் தலையாகிய கிறிஸ்து மாற்றத்துக்கு உட்பட்டவர் அல்ல. சபையிலுள்ள எந்த ஒரு மனுஷனும் அவருக்கு பதிலாக திறமை அல்லது மதிப்பு வாய்ந்தவர் அல்ல. சபை அங்கத்தினர்களுக்கு மற்றொரு ராஜாவை தெரிந்தெடுக்க உரிமை இல்லை.